பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

21 02 2026 SATURDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உத்தரப்பிரதேசத்தில் HCL-பாக்ஸ்கான் கூட்டு நிறுவனத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டுகிறார்.

2. ரணஜன்னி, தொண்டை அடைப்பான் தடுப்பூசி திட்டத்தை, ஹிமாச்சலப்பிரதேசத்தில் மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா இன்று தொடங்கி வைக்கிறார்.

3. வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தப் பணியின் போது ஏற்பட்ட அரசியல் தலையீடுகள் மீது நடவடிக்கை எடுக்காத மேற்குவங்க மாநில காவல்துறை தலைமை இயக்குநரின் செயல்பாட்டிற்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

4. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும், இந்திய பொருட்கள் மீது தற்காலிகமாக 10 சதவீத வரி விதிக்கப்படும் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

5. புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Kaliyanda Poonacha, தாய்லாந்தின் Pruchya Isaro இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<<

உத்தரப்பிரதேசத்தின் யமுனா விரைவுச்சாலை தொழில் மேம்பாட்டு ஆணையத்தில், HCL-பாக்ஸ்கான் கூட்டு நிறுவனத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டுகிறார்.

உள்நாட்டு உற்பத்தியை பெருக்கவும், இறக்குமதியை சார்ந்திருப்பதை குறைக்கவும், வலுவான உலகளாவிய விநியோகச் சங்கிலிகளை உருவாக்கவும் அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு ஏற்ப இத்திட்டம் அமைந்துள்ளது.

இந்த முன்முயற்சியின் மூலம், நாட்டின் செமி கண்டக்டர் சுற்றுச்சூழல் அமைப்பு பெரும் ஊக்கத்தைப் பெறுவதுடன், புதிய கண்டுபிடிப்புகள், திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆகியவையும் மேம்படும்.

இந்தத் தொழில் மையம், பொறியாளர்கள், ஆயிரக்கணக்கான தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இது சார்ந்த பிற துணைத் தொழில்களின் வளர்ச்சியையும் இது ஊக்குவிக்கும்.

தொழில்நுட்பத் தன்னிறைவை நோக்கிய நாட்டின் பயணத்தில் இந்த உற்பத்தி ஆலை ஒரு முக்கிய மைல்கல் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் பிரேசில் அதிபர் திரு. லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா ஆகியோர் இன்று புதுதில்லியில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்து ஆலோசிக்கவுள்ளனர்.

பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்த கருத்துக்களை இரு தலைவர்களும் பரிமாறிக் கொள்ள உள்ளனர்.

இதில் பன்னாட்டு அமைப்புகளில் ஒத்துழைப்பு, சீர்திருத்தப்பட்ட பன்முகத்தன்மை, உலகளாவிய நிர்வாகம் மற்றும் 'குளோபல் சவுத்' எனப்படும் வளரும் நாடுகளின் பிரச்சினைகள் ஆகியவை அடங்கும்.

இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய இரு நாடுகளும் ஜனநாயக கோட்பாடுகள், நெருக்கமான மக்கள் உறவுகள் மற்றும் முக்கிய துறைகளில் விரிவடைந்து வரும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பன்முகத்தன்மை கொண்ட உத்திசார் கூட்டு செயல்பாடுகளை பகிர்ந்து கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது

>>>>>>><<<<<<<

ரணஜன்னி, தொண்டை அடைப்பான் போன்ற நோய்களிலிருந்து பாதுகாக்கும் வகையில், தடுப்பூசி திட்டத்தை, ஹிமாச்சலப்பிரதேசத்தில் மத்திய காதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா இன்று தொடங்கி வைக்கிறார்.

இமாச்சலப் பிரதேசத்தின் கசௌளலியில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் இந்த தடுப்பூசியை அமைச்சர் அறிமுகப்படுத்தி வைக்கிறார்.

இந்த தடுப்பூசி, நாட்டின் பொதுச் சுகாதார அமைப்பை வலுப்படுத்துவதிலும், நோய்த்தடுப்புத் திட்டத்தை மேலும் பயனுள்ளதாக்குவதிலும் ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது.

தேசிய அளவிலான நோய்த்தடுப்பு முயற்சிகளுக்கு இத்திட்டம் புதிய வேகத்தை அளிக்கும் என்று மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தப் பணியின் போது ஏற்பட்ட அரசியல் தலையீடுகள் மீது நடவடிக்கை எடுக்காத மேற்குவங்க மாநில காவல்துறை தலைமை இயக்குநரின் செயல்பாட்டிற்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது

அரசியல் தலைவர்களின் ஆட்சேபனைக்குரிய கருத்துகளுக்கு எதிராகக் காவல்துறை தலைமை இயக்குநர் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், எதிர்காலத்தில் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும், இதுவரை பெறப்பட்ட புகார்களின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அடுத்த விசாரணையின் போது காவல்துறை தலைமை இயக்குநர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு அடுத்த மாதம் மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளது.

>>>>>>><<<<<<<

ஜம்மு காஷ்மீர் சட்டமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதற்கட்ட அமர்வு நேற்றுடன் நிறைவடைந்தது.

2026-27-ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்றுவதற்காக, மீண்டும் மார்ச் 27-ம் தேதியன்று அவை கூடும் என்று சபாநாயகர் திரு. அப்துல் ரஹீம் ரத்தார் அறிவித்துள்ளார்.

இந்த இரண்டாவது கட்ட பட்ஜெட் கூட்டத்தொடரின் போது, ஒதுக்கீட்டு மசோதாவுடன் தனிநபர் மசோதாக்கள், தீர்மானங்கள் மற்றும் பிற அரசு சார்ந்த அலுவல் பணிகள் குறித்து சட்டப்பேரவை விவாதிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்

>>>>>>><<<<<<<

வங்காள இலக்கியத்தின் பிரபல எழுத்தாளர் மணிசங்கர் முக்கோபாத்தியாயா மறைவிற்குப் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

முக்கோபாத்தியாயா-வின் எழுத்துக்கள், மக்களின் வாழ்க்கையை உணர்வு ரீதியாகவும், ஆத்மார்த்தமாகவும் சித்தரிப்பவை என்று பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், வங்காள இலக்கிய உலகில் அவரது படைப்புகள், பல தலைமுறைகளை தாண்டி போற்றப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்

>>>>>>><<<<<<<

ஹோலி பண்டிகைக் கால நெரிசலைக் கருத்தில் கொண்டு, மத்திய ரயில்வே மற்றும் மேற்கு ரயில்வே கூடுதல் சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளன.

கூடுதலாக 24 சிறப்பு ரயில் சேவைகளை மத்திய ரயில்வே இயக்க உள்ளதாகவும், இதன் மூலம் ஹோலி பண்டிகைக்கான மொத்த சிறப்பு இரயில்களின் எண்ணிக்கை 240-ஆக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், மும்பை, பாந்த்ரா டெர்மினஸ், உத்னா, சபர்மதி மற்றும் இந்தூர் ஆகிய முக்கிய வழித்தடங்களில் இருமார்க்கத்திலும் ஆறு சிறப்பு கட்டண ரயில்களை மேற்கு ரயில்வே அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த இரயில்களுக்கான முன்பதிவுகளை இணையதளம் மூலம் மேற்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் ஜம்முவில் ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி - கத்ரா இடையே இயக்கப்படும் சிறப்பு ரயிலின் சேவையை நீட்டிப்பதாக வடக்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

அமெரிக்காவின் வரிவிதிப்பு முறைகளில் பலவற்றை அந்நாட்டு உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளதை அடுத்து, மாற்றுச் சட்டங்களைப் பயன்படுத்தி உலகளாவிய அளவில் புதிதாக 10 சதவீத வரி விதிக்கப்படும் என்று அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய வரிகள், அதிகபட்சமாக 150 நாட்களுக்கு மட்டுமே வரி விதிக்க அனுமதிக்கும் ஒரு தனிச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தனது வரி விதிப்புகளுக்கு எதிராக தீர்ப்பளித்த நீதிபதிகள் குறித்து தான் வருத்தப்படுவதாகவும் இந்தத் தீர்ப்பு மிகுந்த ஏமாற்றம் அளிப்பதாகவும் திரு. டோனல்ட் டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்

இந்நிலையில், அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும், இந்திய பொருட்கள் மீது தற்காலிகமாக 10 சதவீத வரி விதிக்கப்படும் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது

அமெரிக்க உச்சநீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட சர்வதேச அவசரக்கால பொருளாதார அதிகாரச் சட்டத்தின் அடிப்படையிலான முந்தைய வரிகளுக்குப் பதிலாக இந்தப் புதிய வரி விதிப்பு அமையும்.

பிரிவு 122-ன் கீழ் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த 10 சதவீத வரி விதிப்பு, இந்திய பொருட்கள் மீது ஏற்கனவே நடைமுறையில் இருந்த வரிகளுடன் கூடுதலாக விதிக்கப்படாது என்றும், அதற்கு மாற்றாகவே இருக்கும் என்றும் வெள்ளை மாளிகை தெளிவுபடுத்தியுள்ளது.

இதற்கிடையே சமீபத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டு அறிக்கையின்படி, இந்தியாவும் அமெரிக்காவும் இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் பயனளிக்கக்கூடிய வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், முதன்மைப் பேச்சுவார்த்தையாளர் தலைமையிலான இந்தியத் தூதுக்குழு அடுத்த வாரம் அமெரிக்காவிற்குப் பயணம் மேற்கொள்ள உள்ளது என்று தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

லெபனானின் கிழக்கு Bekaa பள்ளத்தாக்கு பகுதியில் நேற்று இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் மூன்று குழந்தைகள் உட்பட குறைந்தது 10 பேர் உயிரிழந்தனர். 24 பேர் காயமடைந்தனர்.

முன்னதாக, நேற்று காலை பாலஸ்தீனிய அகதிகள் முகாம் ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய மற்றொரு தாக்குதலில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

லெபனானின் ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவின் கட்டுப்பாட்டு மையங்களை இலக்கு வைத்து பெக்கா பள்ளத்தாக்கில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இது குறித்து ஹிஸ்புல்லா அமைப்பிடமிருந்து உடனடியாக எந்த அறிக்கையும் வெளியாகவில்லை

>>>>>>><<<<<<<

புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Kaliyanda Poonacha, தாய்லாந்தின் Pruchya Isaro இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இந்த இணை சுவிட்சர்லாந்தின் Luca Castelnuovo – ஜப்பானின் Rio Noguoh இணையை 6-2, 6-2 என்ற செட்கணக்கில் வென்றது.

>>>>>>><<<<<<<

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி, இன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டி, அடிலெய்டில் பிற்பகல் மணி 1.45-க்கு தொடங்குகிறது.

>>>>>>>END<<<<<<<